முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1436

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.09.2023**, திங்கட்கிழமை

1. பிரணவக்குடில் படைத்து பேருலகமெல்லாம்
பிரணவ சக்திமிகு ஆறுமுகன் என் வழிபாட்டை
சரவணச்சுடரேற்றி அருளுகின்ற
சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 18 ம் நாள், 04.09.2023 திங்கட்கிழமை)
வரமென அரங்கன் திருவடி பற்றி
வையகத்தார் வணங்கி தொழுதுவர
3. வருகவே அவரவர் வாழ்விலும்
வரமாக நல்வினை பெருகி இனிதே
திறம்பட இந்த பேருலகில் தேட்டுதன தொழில் வளமென
தெரிவிப்பேன் சகல வளமும் கூடி
4. கட்டமில்லா ஞான வாழ்வாகவும்
கண்ணியமிக்க செயல்பாடுகளாகவும்
வாட்டமற சிறந்து இனிதே
வையகத்தார் ஞானிகளாகக்கூடும்
5. ஆகவே உலகில் அற்புதமாக
அரங்கன் நோக்கம் பூர்த்தியாகும்
வகைபட எக்காலமும் வையகத்தை
வதைக்கின்ற நிலைகள் இல்லாத
6. சாதகமாய் அனைத்து காரியங்களும் வெற்றிகண்டு
சாற்றிடுவேன் அரங்கன் தயவால் இந்த உலகம் அற்புதம் காணும்
ஆகவே ஓங்காரக்குடில் நோக்கி மக்கள் வர
ஆகவே ஓங்காரன் ஆசிபட உலகோர் நடக்க

7. வகைபட உலகில் மாற்றம்
வல்லமைபட அரங்கன் சக்தியாகவே காணக்கூடும்
கூடவே குருவடி தொழுவது அல்லாது
குவலயத்தார்க்கு ஞானசித்தி இனி இல்லை
8. நாடெங்கிலும் உள்ள ஆன்மீக சான்றோர்கள்
ஞானவான்கள் ஒன்றிணைந்து அரங்கன் திருவடி பற்ற
பற்றவே யாவர்க்கும் ஞான சித்தி
பழுதில்லா காரியசித்தி சகலவளமோடு
9. உற்றதொரு ஆயுளும் ஏற்றம் காணும்
உயர்வுபட சன்மார்க்கமும் தழைத்தோங்கும்
கொண்டதொரு அரங்கன் புகழ் உலகறிய
குவலயத்தில் பேரற்புதம் நிகழக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—